09.07.2026 Mcop 139/2023 ம.சா.1 கமலேஸ்வரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

என் கணவர் பெயர் குத்தாலம். என் கணவர் மேலகரத்தில் தான் உள்ளார். எனது ஆதார் முகவரியும் மேலகரம் முகவரியில் தான் உள்ளது. என் தாயார் என்ன சிகிச்சை எடுத்து வந்தார் என்றால் கிட்னி பிரச்சனை சம்பந்தமாக சிகிச்சை எடுத்து வந்தார். முதல் தகவல் அறிக்கையில் காரில் பயணம் செய்த என் அம்மாவும், என் சகோதரியும் சீட்பெல்ட் அணிந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு விபத்து பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் தகப்பனார் தான் விபத்தில் ஈடுபட்ட வாகனத்தை ஒட்டியவர் என்றால் சரிதான். என் தகப்பனார் தான் 1ம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். என் தகப்பனார் முகவரியும், நான் குடியிருந்து வரும் முகவரியும் ஒரே முகவரி என்றால் சரிதான். இந்த மனு விபரம் அனைத்தும் என் அப்பாவிற்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். இந்த மனுவில் என் அப்பா ஆஜராகி வழக்கு நடத்தவில்லை என்றால் சரிதான். தெரிந்தே தான் வழக்கு நடத்தாமல் இருந்து வருகிறார் என்றால் சரிதான். என் அப்பா மீது தான் தவறு என் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். என் அப்பா மீது தாக்கல் செய்த குற்ற இறுதியறிக்கை சரியானது என்றால் சரிதான். என் அம்மா சிறுநீரக பாதிப்பு அடைந்து பாதிக்கப்பட்டு இருந்ததால் அவர் வேலை செய்யக்கூடிய உடல்நிலையில் இல்லை என்றால் சரியல்ல. என் அப்பா ஒட்டிசென்ற காருக்கு கூடுதலாக பயணம் செய்யக்கூடிய பயணிகளுக்கு தனியாக காப்பீடு பெறப்படாததால் 2ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எங்களுக்கு எங்களது அப்பா தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)K.சுதா ராணி
கூடுதல் சார்பு நீதிபதி
தென்காசி.